## பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 14 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்.................................................... | தந்தை /கணவர் பெயர்........................................... |
| கிராமம்........................................................... | இனம்.................................................................... |
| தாலுக்கா........................................................... | மொழி...................................................................... |
| மாவட்டம்......................................................... | தொழில்................................................................... |

---

# G.W.O.P. No. 846/2021

# 14.03.2024

**ம.த.சா. 1 - திருமதி. கிருஷ்ணவேணி, த/பெ. (லேட்) சுப்பிரமணிய பிள்ளை**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லியில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மைனர் ஆதித்யா அருணாச்சலத்தின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பிறப்புச்சான்றிதழ் **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 03.01.2023 தேதியிட்ட Crl.OP.No. 23208/2022 சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு Web copy **ம.த.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. எங்களது புகைப்படங்கள் (வரிசை 15) மற்றும் குறுந்தகடு (வரிசை 1) (எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்) **ம.த.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. எனது பணி அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. நாகர்கோவில், அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.15/2022 ன் முதல் தகவல் அறிக்கை Online copy **ம.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. மைனர் ஆதித்யா அருணாச்சலம் பள்ளியில் நடைபெற்ற meeting ல் எடுத்த புகைப்படம் மற்றும் குறுந்தகடு **ம.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. Just dial நிறுவனத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட உத்தரவு (எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்) **ம.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 08.01.2013 தேதியிட்ட E-ticket ரசீது (வரிசை 2) (எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்) **ம.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.**

**(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.